# EASTERN UNIVERSITY, SRI LANKA
# FACULTY OF COMMERCE AND MANAGEMENT
# REPEAT EXAMINATION

# FOURTH YEAR EXAMINATION IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION 2002/2003

# BBA 403 STRATEGIC MANAGEMENT

Eastern University

முதலாவது வினா உட்பட ஏதாவது ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
நேரம் 3 மணித்தியாலங்கள்

01.

சுதா, உதயன், சிறி மற்றும் பாலன் ஆகியோர் தமது கம்பனி, "சிமைல்-எஸ்.எஸ்.யூ.பீ" இனதும் பிரதான பொருட் பிரிவுகளினதும் விற்பனை மற்றும் சந்தைப்பங்கு செயற்றிறன் தொடர்பாக இறுதியாகக் கிடைத்த தகவல்களை ஆய்வு செய்திருந்தனர், அவை பின்வருமாறு:

சந்தைப்பங்கு மற்றும் விற்பனை வளர்ச்சி தொடர்பாக "சிமைல்-எஸ்எஸ் யூ.பீ" யின் வருடாந்த தரவுகள் பின்வருமாறு:

| பொருட்பிரிவு | ஒப்பீட்டு ரீதியான சந்தைப்பங்கு | விற்பனை வளர்ச்சி |
|---|---|---|
| விளையாட்டுப் பொருட்கள் | பெரிது | உயர்வு |
| சைம்போ | சிறிது | குறைவு |
| வலு/சக்தி | பெரிது | குறைவு |
| சவர்க்காரம் | பெரிது | உயர்வு |
| களிகள் (கிறீம்) | சிறிது | உயர்வு |

அப்புள்ளி விபரங்களையும், தொகைகளையும் அவர்கள் பார்வையிட்டதன் மூலம், கிறீம் பிரிவிற்கான, நிறுவனத்தின் எதிர்காலத் திட்டம் பற்றி உத்தேசித்திருந்தனர். "சந்தை ஆராய்ச்சியில் ஓய்வின்றி செயற்பட வேண்டிய ஒரு ஆண்டாக இது எங்களுக்கு இருக்கப் போகின்றது" என புன்னகையோடு கூறினார் சுதா. "இது உங்களுக்கு ஒரு சவால் என நான் நம்புகிறேன்" இது ஒரு புதிய தொடக்கமாகும் எனக் கூறினார்.

திகைப்புடைய சிறியின் முகத்தைப் பார்த்த, உதயன் ஒரு சுருக்கமான விளக்கத்தை அளித்தார். "சிமைல்-எஸ்.எஸ்.யூ.பீ"யின் தந்திரோபாய திட்டமிடலுக்கான தற்போதைய அணுகுமுறையானது ஒவ்வொரு பொருட் பிரிவுகளுக்குமான தந்திரோபாய மாற்றுத் தீர்வுகளின் பொருத்தப்பாட்டினை பார்க்கக்கூடிய வகையில் சந்தைப்பங்கு - மற்றும் சந்தை வளர்ச்சி தாயத்தினை பயன்படுத்துகின்றது என்று அவர் சிறிக்குச் சொன்னார்,

"அதன்விளைவை" உதயன் விளக்கினார். "நாங்கள் இவ் சந்தைப்பங்கு மற்றும் விற்பனை வளர்ச்சித் தகவல்களைக் கொண்டு பிரிவின் நிலைப்பாடு எவ் நிலையில் உள்ளது எனப் பார்ப்பதற்கு, ஒரு பங்கு-வளர்ச்சி தாயத்தில் வரைய முடியும் ஆகையால், எமது பிரிவின் உற்பத்திப்பாடு என்ன என்பது தொடர்பாக ஒரு சிறந்த நல்லதொரு தெளிவினை நாம் பெற முடியும்."

அதன் பின்பு, உதயன் (கீழே காட்டப்பட்டுள்ளவாறு) ஒரு பங்கு-வளர்ச்சி தாயத்தை வரைந்திருந்தார். அவர், பங்கு-வளர்ச்சித் தாயத்தின் நான்கு வகைப்பட்ட மூலதனத்தையும் (அல்லது BCG) அவற்றின் தந்திரோபாய நடைமுறைப்படுத்தல்களையும் விளக்கியிருந்தார். பின்பு சிறியைப் பார்த்து "தற்போது ஐந்து பொருட் பிரிவுகளையும் அதில் வரைந்து எது உறுதியாக உள்ளது என எங்களுக்குச் சொல்லும்" எனக் கூறினார்.

பங்கு-வளர்ச்சித் தாயம்

சந்தைப்பங்கு - ஒப்பீட்டு ரீதியில்

| சிறிது | பெரிது | |
|---|---|---|
| | | உயர்வு |
| | | குறைவு |

விற்பனை வளர்ச்சி

வினாக்கள்

1. பின்வரும் தகவல்களை உள்ளடக்கி (மேலே காட்டப்பட்ட) சிமைல்-எஸ்.எஸ்.யூ.பீயின் பங்கு-வளர்ச்சியைப் பூரணப்படுத்துக: தாயத்தின் ஒவ்வொரு பிரிவுகளிலும் எப்பொருட் பிரிவு பொருந்தக்கூடும் என வகைப்படுத்தி குறிப்பிட்டுக் காட்டுக. பொதுதவாக (உயர்வு அல்லது குறைவு) எனும் சொற்களில், காசு மற்றும் முதலீடு தொடர்பாக ஒவ்வொரு பொருள் வரிசையிலும் எதிர்பார்க்கப்படுபவை எவை எனக் குறிப்பிடுக.

2. இவ்வகையான பட்டியல் பகுப்பாய்வின் (Portfolio Analysis) நோக்கம் என்ன?

3. இத்தாயத்தில், கிறீம் பொருள் வரிசைப் பிரிவு எங்கே அமையும்? அதன் வகைப்படுத்தலைத் தருக், அதற்காகக் கருத்திற் கொள்ளப்படக்கூடிய தந்திரோபாயங்கள் எவை? இவ்வருடம் தனது திணைக்களத்திற்கு ஒரு சவால் மிக்க ஒரு வருடமாக இருக்கும் என சுதா ஏன் எதிர்வு கூறுகிறார்?

4. தாயத்தின் ஏனைய மூன்று பகுதிகளுக்குமான பொருட்பிரிவுகளுக்காக கருத்தில் கொள்ளக்கூடிய தந்திரோபாயங்கள் எவை?

LIBRARY
JUL
Eastern University, Sri Lanka

5. இவ்வகையான பட்டியற் பகுப்பாய்வின் வரையறைகள் எவை?

(28 புள்ளிகள்)

02. (a) நிறுவனங்கள் மாற்றத்திற்கான எதிர்ப்புக்களை ஏன் எதிர்நோக்குகின்றன? முகாமையாளர்கள் எவ்வாறு இம்மாற்றத்திற்கான எதிர்ப்புக்களைக் குறைக்க முடியும்?

(07 புள்ளிகள்)

(b) வியாபார மறு பொறியியல் (Business Re-Engineering) செயற்பாடு எவ்வாறு தந்திரோபாய முகாமைச் செயற்பாட்டிற்கு உதவி புரிகின்றது என விளக்குக?

(07 புள்ளிகள்)

(c) சூழல் ஆய்வின் நோக்கங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

03. (a) நிறுவன வாழ்க்கை வட்டத்தின் நான்கு கட்டங்களுக்கும் உங்களால் விருத்தி செய்யக்கூடிய பொருத்தமான தந்திரோபாயங்கள் யாவை?

(07 புள்ளிகள்)

(b) உங்களுக்கு பரிட்சயமான ஒரு நிறுவனத்தின் முக்கிய நிறுவன அக்கறையுடையோர்களை (Stakeholders) அடையாளம் காண்பதுடன் அவர்களுடைய முக்கிய கோரிக்கைகளை சுருக்கமாக விளக்குக?

(07 புள்ளிகள்)

(c) மூன்று மட்ட தந்திரோபாயங்கள் எவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றது?

(04 புள்ளிகள்)

04. (a) ஒரு நிறுவனத்தில் அதன் தந்திரோபாய அலகுகளுக்கு மூலதனத்தை ஒதுக்கீடு செய்வதில் GE வார்புருவின் பாத்திரத்தை (role) விளக்குக?

(08 புள்ளிகள்)

(b) பொருத்தமான உதாரணத்துடன் அன்சொவ்வின் பொருள்-சந்தை பெருக்கமடைதல் கட்டத்தை (Ansoff Product-Market Expansion Grid) வரைவிலக்கணப்படுத்துக?

(06 புள்ளிகள்)

(c) ஒரு சிறந்த தூரநோக்கு கூற்றிற்கான (mission statement) குணாதிசயங்களை பட்டியலிடுக?

(04 புள்ளிகள்)

05. (a) "ஒரு தொழிற்துறையினுடைய (Indusrty) எதிர்கால இலாபம் உடைக்கும் ஆற்றலானது அவ் தொழிற்தறையினுள் காணப்படும் அடிப்படை போட்டி சக்திகளில் தங்கியுள்ளது" (பேராசிரியர் மைக்கல் E. போட்டர்). இவ் மேற்கூறப்பட்ட கூற்றின் மூலம் நீங்கள் எதனை விளங்கிக் கொள்கின்றீர்கள் என்பதை விளக்குக?

(08 புள்ளிகள்)

(b) சாதாரணமாக குறிக்கோளானது கணிய ரீதியாகவும், பண்பு ரீதியாகவும் விபரிக்கப்படுகின்றன. இவ்வாறு விபரிக்கப்படுவதற்கான முக்கியத்துவம் என்ன என்பதைத் தகுந்த உதாரணங்களுடன் விளக்குக?

(05 புள்ளிகள்)

(c) அனுபவளையியை (Expansion curve) எவ்வாறு நீங்கள் சந்தைப்பங்கு, செலவு மற்றும் இலாபத்துடன் தொடர்புபடுத்துவீர்கள்?

(05 புள்ளிகள்)

06. (a) உள்ளக சூழலை வெளியக சூழலிலிருந்து வேறுபடுத்துக? தந்திரோபாயங்களை விருத்தி செய்கின்றபோது முகாமையாளர்கள் ஒவ்வொரு சூழலிலிருந்தும் கவனத்தில் எடுத்தக்கொள்ள வேண்டிய காரணிகள் யாவை?

(07 புள்ளிகள்)

(b) மக்கின்ஸியின் 7's (McKeinseys 7's)யை விபரிப்பதுடன் தந்திரோபாய அமுலாக்கத்துடன் எவ்வாறு இது தொடர்புடையது என விளக்குக?

(07 புள்ளிகள்)

(c) தந்திரோபாயம் என்ற சொற்பதத்தை விளக்குவதுடன் தந்திரோபாய உருவாக்கம் ஏன் ஒரு நிறுவனத்தை மேலும் வினைத்திறனாக்கும் என்பதை விளக்குக?

(04 புள்ளிகள்)

07. (a) ஒரு நிறுவனத்தின் செயற்திறனை (Competence) மதிப்பாய்வு செய்வதில் பெறுமதி சங்கிலி ஆய்வின் (Value-chain analysis) பாத்திரத்தை விளக்குக?

(07 புள்ளிகள்)

(b) போட்டரின் (Porter's) மூலாதார (genetic) தந்திரோபாயங்களை பொருத்தமான உதாரணங்களுடன் விபரிக்குக?

(07 புள்ளிகள்)

(c) தந்திரோபாய வியாபார அலகின் (SBU) மூலம் நீங்கள் கருதுவது யாது? பொருத்தமான உதாரணத்தைத் தருக?

(04 புள்ளிகள்)

08. (a) சூழல் ஆய்வு மேற்கொள்ளுவதற்கு வெவ்வேறான பயன்படுத்தப்படும் நுட்பங்களை பட்டியலிடுக? இவற்றில் இரண்டை தெரிவுசெய்து அவற்றின் நன்மைகள் தீமைகளை தருக?

(09 புள்ளிகள்)

(b) தந்திரோபாய முகாமைத்தவ செயன்முறையின் இரண்டு மாதிரிகளை (models) ஒப்பிட்டு வேறுபடுத்தக?

(09 புள்ளிகள்)

LIBRARY
JUL [illegible]
Eastern University, Sri Lanka